


– வாழ்வோம்

புதையல் 4

தமிழ்-தமிழர், தமிழ்நாட்டிற்காகவும் குரல்கொடுத்த திராவிட இயக்க இதழ்களில் வெளியான, பல்வேறு காலங்களையும் தாண்டி நிலைத்து நிற்கும் சிறப்புமிக்க எழுத்துகளில் இருந்து சில பகுதிகள்...


அந்த நல்ல பண்பு...!

அந்த நல்ல பண்பு!

மத்திய - மாநிலங்களின் நிர்வாகப் போக்கைப் பற்றி, பலரும் கண்டித்த வண்ணம் உள்ளனர். வெறும் கிளர்ச்சிக்காரர்களாக இருந்தவர்கள் கையில், திடீரென்று நிர்வாகப் பொறுப்பு கிடைத்துவிட்டால், அதனை அவர்களால் சமாளிக்க முடியாதென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. சிறிது சிறிதாக நிர்வாகம் செய்யும் முறையைத் தெரிந்துகொண்ட பின்னர்தான், அதனை இயக்கிச் செல்ல முடியும் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால், "என்னைவிட நிர்வாகத்தை நடாத்திச் செல்ல யாரால் முடியும்?" என்ற போக்கில் ஆட்சிப் பீடத்தை அலங்கரித்துக்கொண்டிருப்பவர்களைப் பற்றி என்ன கூறுவது?

இன்றைய டில்லி அரசு, தனது நிர்வாகத் திறமைக் குறைவை ஒப்புக்கொள்ள மறுக்கும் முறையில் காரியங்களை நடத்திவருகிறது. ஆட்சிப் பீடம் ஏறிப் பதினொரு ஆண்டுகளாகியும், இன்னும் எந்தத் துறையிலும் தனது நிர்வாகத்தைச் சரிவர நடத்த முடியவில்லை. எந்த இலாகாவை எடுத்துக்கொண்டாலும், அதில் ஊழலும் ஊதாரித்தனமும் மலிந்து கிடப்பதாகவே, அந்தந்த இலாகா தணிக்கைக் குழுவின் அறிக்கை கூறுகிறது. ஆட்சிப் பொறுப்பை ஏற்று, நிர்வாகத்தை நடத்திச்செல்லும் காலம் அதிகமாக அதிகமாக, நிலைமை திருந்தி நிர்வாக இயந்திரம் ஒழுங்காக இயங்கும் என்கிற நிலைமாறி, ஆளும் கால அளவைவிட அதிக அளவில் - அதிவேகத்தில் ஊழல்கள் மலிந்தவண்ணம் உள்ளன. இதனை நாம் கூறினால், "இவர்களுக்கு வேறு வேலை ஏது? சர்க்காரையும் அது சார்ந்துள்ள கட்சியையும் குறை கூறுவதைத் தவிர, இவர்களுக்கு என்ன தெரியும்?" என்று கூறிக்கொள்வதிலே சுவை கண்டு மகிழ்பவர்களாயிற்றே, நமது காங்கிரஸ் நண்பர்கள். அவர்கள் மட்டுமென்ன, நம்மைப் பிடிக்காதவர்கள் - நம்மைக் கண்டால் நடுங்குபவர்கள் - நம்மைப் பார்க்கும்போது நயமாகப் பேசி, நாலடி எடுத்து வைத்ததும் நாவார வைபவர்கள் அனைவருமே நாம் பேசுவதிலே - எழுதுவதிலே குறை காண முயல்பவர்கள் தானே!

எனவேதான், இன்றைய ஆளுங்கட்சிக்கு நிர்வாகத் திறமை இல்லை. இல்லாதது மட்டுமல்ல - வரவர அது குறைந்துகொண்டும் வருகிறதென்ற உண்மையை ஆளுங்கட்சியை ஆதரிக்கும் நிலையிலுள்ள ஏடுகளில் ஒன்றான 'தினமணி' 21.03.59-இல் வெளியிட்டிருக்கும் செய்தியை, இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

"குடிபெயர்ந்தோர் புனர்வாழ்வுக்காக மத்திய அரசாங்கம் வீடுகள், விடுதிகள், கடைகள் முதலியன கட்டித்தந்ததல்லவா? அவற்றுக்காகக் கொடுக்கப்படவேண்டிய வாடகை, சுமார் இரண்டு கோடி ரூபாய் பாக்கி நிற்கிறது. 1956 ஆகஸ்ட்டிலேயே இந்நிலை. பல இடங்களில் வாடகைப் பணத்தை வாங்கி ஏப்பம் விட்டுவிட்டு, ஓர் அதிகாரி அந்தர்த்யானமாகிவிட்டார். போலீஸார் மூன்று வருஷ காலமாக அவரைத் தேடிவருகின்றனர்.

சர்க்கார் சொத்துகளைப் பற்றிச் சரியான கணக்குவழக்கே காணப்பட வில்லை. அதனால், ஒரு பகுதியில் மட்டும் பல வீடுகள் வாடகை விதிக்கப் படாமல் தப்பிவிட்டன. 1949 - 1950-லிருந்து சர்க்காருக்குப் பிரதி வருஷமும் பல்லாயிரம் ரூபாய்கள் நஷ்டம். ரசீது கொடுத்தால், உடனே புத்தகத்தில் பதிவுசெய்வது என்ற பழக்கமே கிடையாது. அனுமதியில்லாமலேயே ஊழியர்களுக்கு ஏராளமான தொகைகள் வாரி வழங்கப்பட்டிருக்கின்றன.

1958 -ஆம் ஆண்டு அக்டோபரில், ஒரு கோடியே 8 இலட்சம் ரூபாய் வாடகை, வரி பாக்கி நின்றது. பாக்கி நிற்கும் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. ஜரூர் நடவடிக்கை எடுக்கா விட்டால், அதை வசூலிக்கவே முடியாது என்பதை கமிட்டி வற்புறுத்தியுள்ளது. குடிபெயர்ந்தோர் புனர் வாழ்வு இலாகா அதிகாரிகளின் விளக்கமும் சால்ஜாப்பும், கமிட்டிக்கு திருப்தியளிக்கவில்லை."

தினமணியார் தரும் இந்தப் புள்ளி விவரம், ஒரு துறையை மட்டும் எடுத்து விளக்குவதாகும். அரசாங்கத்தின் ஒவ்வொரு துறையிலும் இதே விதமான குறைகள் கூறப்படுவது, இப்பொழுது நடைமுறையாக அமைந்துவிட்டது. எந்த இலாகாவிலும் ஏதாவதொரு குறை - தவறு - தகராறு - தகாத செயல் இருப்பதை அந்தத் துறையின் தணிக்கைக்குழு எடுத்துக் காட்டிய வண்ணம் உள்ளது.


ஆட்சிப் பொறுப்பை ஏற்று, நிர்வாகத்தை நடத்திச்செல்லும் காலம் அதிகமாக அதிகமாக, நிலைமை திருந்தி நிர்வாக இயந்திரம் ஒழுங்காக இயங்கும் என்கிற நிலைமாறி, ஆளும் கால அளவைவிட அதிக அளவில் - அதிவேகத்தில் ஊழல்கள் மலிந்தவண்ணம் உள்ளன.

நிர்வாகம் என்பது, வறிதே 'பஞ்சசீலம்' பேசுவது போன்றதோ அல்லது 'சோஷலிச பாணி' போன்றதோ அல்ல. அதற்குத் தனியொரு திறமை வேண்டும். ஆனால், அது ஒரு குறிப்பிட்டவர்களால் மட்டும் பெறக்கூடியதும், மற்றவர்களால் பெற முடியாததுமல்ல. யாரும் அந்தத் திறமையைப் பெறலாம் - நல்லெண்ணமும் எதனையும் நடுநின்று சீர்தூக்கி நெறி வழங்கும் இயல்பும் பெற்றவர்களால். ஆனால் அந்த நல்ல பண்பு, இன்றைய ஆட்சிப் பீடத்தில் இருப்போருக்கு இன்னும் ஏற்படவில்லை - ஏற்பட வேண்டுமென்பதுதான் எங்கள் விருப்பமுமாகும்.

(திராவிடநாடு தலையங்கம், 29.03.1959)

● பாரத் ஸ்ரீமன் அழகேசன் ●

கலகக்காரர் கலைஞர் 04



இந்தியாவின் முதல் சட்டப் பல்கலைக்கழகமான தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் 3-10-1997 அன்று முதல் செயல்படத் தொடங்கியது.

■ எழுத்து: **மகிழவன்,**
ஏஐ உருவாக்கம்: **ஆரிஃப் முகம்மது**

ஃப்ளாஷ்பேக்



தலைவர் தந்த பரிந்துரை!

1979-ஆம் ஆண்டு திருவண்ணாமலையில், அன்றைய கொள்கை பரப்புச் செயலாளர், அண்ணன் கந்தப்பன் அவர்கள் தலைமையில், கழகச் சொற்பொழிவாளர்கள் பயிற்சி முகாம் ஒரு வார காலம் நடைபெற்றது. பயிற்சி முகாம் இறுதி நாளில், தலைவர் கலைஞர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார். தலைவர் பேசுவதற்கு முன்னர், பயிற்சிப் பாசறை குறித்துப் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. தலைவர் அவரது உரையில், அதைக் குறிப்பிட்டு என்னைப் பாராட்டியது, வாழ்நாள் மகிழ்ச்சி. தலைமைக் கழகப் பேச்சாளராய்த் தலைவரால் பரிந்துரைக்கப்பட்ட என்னை, அன்றய ஆயிரம்விளக்குப் பகுதிச் செயலாளர் அண்ணன் எஸ்.ஏ.எம். உசேன் அவர்கள் சிறப்புப் பேச்சாளராக 20 வயதில் மேடையேற்றினார்.



கவிஞர். செங்கைதாமஸ்

– **கவிஞர்.செங்கைதாமஸ், தலைமைக் கழகச் சொற்பொழிவாளர், மாவட்ட தொழிலாளர் அணி தலைவர், காஞ்சி வடக்கு**

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள்.
அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614,
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

தெரிந்து கொள்வோம்

1960

-இல் `திராவிட நாடு' மற்றும் `விடுதலை' வார விழா'வை முன்னெடுத்தது கழகம். விழாவுக்கான கொடி, தோரணங்கள் கட்டும் பணியில் ஈடுபட்ட திருப்பூர் கணேசன், உயரமான கம்பத்தில் இருந்து தவறிவிழுந்து உயிரிழந்தார். திருப்பூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், கணேசனின் மனைவி கிருஷ்ணவேணியிடம் வீட்டுக்கான ரூ.5,000 மதிப்பிலான விலைப்பத்திரத்தை வழங்கினார் அண்ணா. கணேசனின் கொள்கைப்பிடிப்பு, தீரம், அருந்தொண்டுகளைப் பற்றியும் அண்ணா நீண்டதொரு உரையாற்றினார்.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900